ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

त्वत्पादपद्मरसिकेष्वयमप्युमेश कश्चित्भवेयमिति मेऽनुचितापि कांक्षा ।
ऐन्द्रे पदे शुनइवेयमहो भृशं मामन्तस्तुदत्यजहती शिव किं करोमि ॥

स्तुतिपद्धतौ ॥

ஹே உமேச! ஸ்ரீ பார்வதீதேவியின் நாதனான பரமேசுவர, உம்முடைய கமலம்போன்ற சரணங்களில் திருடமான பக்தியைச் செய்து, அதின் சுவையை நன்கறிந்தவர்களுக்குள் நானும் ஒருவனாக இருக்கவேண்டுமென்று எனக்கு விருப்பமிருக்கின்றது. சகலதேவர்களுக்கும் அதிபதியாய் விளங்கும் இந்திரனுடைய ஸ்தானமானஸ்வர்க்கத்தில் நாய்க்கு இருக்கும் விருப்பம்போல், எனக்கிருக்கும் ஆசையும் மிகவும் தவறானதென்பதை நான் அறிந்திருந்தும் இந்தஆசையானது என் உள்ளத்தைவிட்டு விலகாமல் எப்பொழுதும் என்னைக் கஷ்டப்படுத்துகின்றது. ஹே சந்திரசேகர! நான் என் செய்வேன்.

உலகில் நற்கர்மாக்களை அனுஷ்டிப்பதில் ஜனங்களுக்கு முயற்சியேற்படுகிறதில்லை. அதற்குக்காரணம் அவர்களின் பாபகர்மங்களே, யாராகிலும் மித்திரர் வந்து நிர்ப்பந்தமாய்ச்சொன்னாலும் நமக்கு அது ஸாத்தியமில்லை என்று செய்யாமலிருப்பதற்கு வேண்டிய போலிக்காரணங்களைப்பல கூறுவார்கள். ஆரம்பகாலத்தில், எதுவும் சிரமம்போல் தோன்றலாம். அவ்விதம் தோன்றுவது இயல்பே. அதற்காக அதை நாம் விடக்கூடாது. அற்பகாலம் விடாமுயற்சியால் ஒரு காரியத்தை அனுஷ்டித்து வந்தால் மனத்திருப்தியும் உத்ஸாகமும் ஸாதித்துவிடலாமென்றதைர்யமும் எற்படும். பகவானும் நமக்கு அனுக்கிரஹம் செய்வார். ஆகையால் ஆரம்காலத்தில் நமக்கு அனர்கம் என்று தோன்றினாலும் நற்கார்யத்தில் நல்ல முயற்சி இருக்கவேண்டியது அவசியமென்பதை இதனால் அறிவிக்கிறார்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
குரோதன-ஸு மாசி-மீ உகவ

# ஸ்ரீ தப்ரபக்த சரிதம்.

## மஹாசிவராத்திரி புண்யகாலத்தில் அத்வைதஸபா பண்டிதரான பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபன்யாசத்தின் சுருக்கம்.

மானிடப்பிறவியைப் பெற்றவர்கள் பவமென்னும் பெரும் பிணியாலேற்படும் கஷ்டத்தைப் போக்கவேண்டி அவரவர்களும் தத்தம் வர்ணாசிரமங்களுக்குற்றவாறு விதிப்படி, கடவுளை ஆராதிக்கவேண்டியது முக்கியம். அதிலும், சிவராத்திரி முதலான சிறந்தபுண்யகாலங்களில் ஈசனுடையபூஜை, ஸ்துதி, அவருடைய சரிதங்களைச் செவியுறுதல், ஆலயங்களில் சென்று வணங்குதல், முதலான கர்மாக்களை அனுஷ்டிப்போர்களுக்கு விசேஷமாக பகவானுடைய அனுக்கிரகமேற்பட்டுச் சகல இஷ்டஸித்திகளும் உண்டாகும் என்று பல பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகையால் இன்றயதினம் அவ்வித புண்யகாலமேற்பட்டிருக்கிறபடியால் ஆஸ்திகர்களனைவரும் தமது சக்திக்கு இயன்றவரையில் ஸ்ரீ பரமேசுவரனை ஆராதிக்கவேண்டியது அவசியமே. சிவராத்திரி என்கிற பதத்திற்குச் சிவனால் தம்மை ஆராதிக்கும் பக்தர்களுக்கு விசேஷமான மங்களத்தை அளிக்கப்படும் ராத்திரி என்பது பொருள். அதிகமான மங்களத்தைக் கொடுக்கும் ராத்திரி என்றும் பொருள்கொள்ளலாம். உமாபதியான ஸ்ரீ மஹாதேவரிடத்தில்கள்ளமில்லாத, உள்ளன்புடன்எந்தஸமயத்தில் யார் பக்தி செய்தாலும் அவரிஷ்டத்தைக் கொடுக்க அவர் ஸித்தமாக இருக்

கிறார். "இவ்விதம் யார் அவரிடம் பக்திசெய்து சிரேயஸ்ஸைப் பெற்றிருக்கிறார்" என்றால் கூறுகிறோம்.

முன்னொருஸமயத்தில் இருடிகளனைவரும் அகத்தியமாமுனிவரிடம் சென்று, அடிவணங்கி "சிவபக்தியின் பெருமையை விளக்கவேண்டும்" என்று வேண்டுங்கால் கருணைகொண்டு அம்முனி செப்புகின்றார். ஹே, முனிகளே! ஸ்ரீசங்கரரிடத்தில் பக்தி ஏற்படுவதரிது. வேடமற்ற உண்மையான சிவபக்தர்களும் அரிதிலும் அரிதே. அவ்விதபக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்பவரும் இவ்வுலகில் அரிதேயாகும். எவர்கள் தம் சரீரம், பொருள், புத்திரன், பெண்டிர், முதலியவைகளைச் சிவபக்தர்களின் கைங்கர்யத்திற்கு உபயோகப்படுத்தவில்லையோ அவர்களால் அடையப்பட்ட இம்மானிடப் பிறவிக்கு யாதொரு பயனுமில்லை உண்மையான ஒரு சிவபக்தன் ஒருவருடைய இல்லத்தை நாடி வந்தால் எதைத்தான் அவனுக்குக் கொடுக்கக்கூடாது? இப்பூமியிலுள்ள ஜனங்களுக்கு எவ்வித துக்கங்களையும் வராமல்தடுப்பதற்குச் சிவபக்தர்களுடைய ஆராதனத்தைத் தவிர்த்து வேறு உபாயம் கிடையாது. மஹாத்மாவான சிவபக்தன் ஒன்றை விரும்பிக்கொடுக்க வேண்டுமென்று அபேக்ஷித்தால், அதைக்கொடுக்காதமனிதன் இப்பூமிக்குப் பாரமாக ஆகிறானேயல்லாமல், ஜன்மஸாபல்யத்தை அடையமாட்டான். ஸ்தாவரமென்று கூறப்படும் விருக்ஷங்கள்கூட இலைகளாலும், புஷ்பங்களாலும், காய்கனிகளாலும் பிறருக்கு உபகரிக்கின்றன. ஆகையால் தம்மாலியன்றவரையில் ஸ்ரீ மஹாதேவ பக்தர்களுக்கு வேண்டிய இஷ்டத்தை எவர்கள் செய்கின்றார்களோ அவர்களுடைய ஜன்மாவே மிகவும் சிறந்ததாகச் சான்றோர்கள் சாற்றுகின்றார்கள். அவ்விதமாராதிப்பதிலும் பிரதோஷம், ஸோமவாரம், ஆர்த்திரா, கிருஷ்ணாஷ்டமி அயநம், மாஸசிவராத்திரி, முதலான புண்ணியகாலங்கள் ஸ்ரீ பரமேசுவரனுக்கு மிகவும் பிரியமான தினங்களாகையால் அக்காலங்களில் மஹேசுவரபக்தருக்கு ஒருவருக்காவது அன்னமிட்டால் மூவுலகிலுள்ள சகல ஜனங்களுக்கும் அன்னதானம் செய்வதால் ஏற்படும் பலனையடைகிறார்கள். அதிகமாக விரிப்பதில் யாது பயன்? ஸகல ஜகத்திற்கும் ஈசனான சிவபெருமான் திருப்தியடை

கிறார். பசுபதியானவர் பிரஸன்னராக ஆனால் எதைத்தான் பெற முடியாது? பரமேசுவாருடைய அர்ச்சனத்தால் ஸம்ஸாரமென்கிற கடலைத்தாண்டி எவ்வித ஆபத்துக்களையும்போக்கி எத்தனை மஹான்கள் ஸு்கத்தையடையவில்லை. ஹேமஹரிஷிகளே! இந்த விஷயத்தில் பெரியோர்களால் ஓர் இதிஹாஸம் கூறப்பட்டிருக்கின்றது. அதையும் உங்களுக்கறிவிக்கிறேன். கவனமாய்க்கேளுங்கள்,' என்று மறுபடியும் சொல்லுகின்றார்.

"ஸ்ரீ சந்திரசேகாருக்கு முக்கிய வாஸஸ்தானமான அருணாரண்யமெனப் பெயர்வாய்ந்த ஒரு நகரமிருக்கின்றது. வேதசாஸ்திரங்களில் பயிற்சிபெற்ற பல சிவபக்தர்களுக்கு அந்நகரம் இருப்பிடமாக விளங்குகின்றது. அங்குள்ள பாலர்கள், கன்னிகைகள் கிளிகள், சாரிகைகள், இவைபாவும் எப்பொழுதும் ''நமச்சிவாய என்றே சொல்லிக்கொண்டிருக்கும். மற்றுமுள்ள ஜனங்களும் தும்மினாலும், இருமினாலும், காலில் இடறினாலும், பேசினாலும், நமச்சிவாய என்கிற, இந்தச்சப்தத்தையே, உச்சாரணம் செய்து கொண்டிருப்பார்கள். விபூதி, ருத்திராக்ஷ தாரண மில்லாமலும் பஞ்சாக்ஷரமந்திரம் ஜபிக்காமலும், ஸ்ரீசங்காருடைய கதையைச் சிரவணம் செய்யாமலும், ஒருவரும் அந்நகரத்தில் இருப்பதில்லை. பாலர்கள் விளையாடும் ஸமயத்திலும் ஈசுவரவேடம்பூண்டு "நான் சிவனாக இருக்கிறேன்" என்று ஒருவருக்கொருவர் அறிவித்துக் கொள்வார்கள். இவ்வித மஹிமைபெற்ற அந்நகரில் சோழதேச மன்னனுடைய அமைச்சவம்சத்தில் வேதக்கடலின் கரைகண்டவராயும் 'பரம்ஜோதி' என்று பெயர்பெற்ற பிரஸித்தராயும் உள்ள ஒருவர் இருந்தார். அவர் சோளவேந்தனுக்கு மந்திரியாக விருந்ததால் அவ்வரசனுடைய சத்துருக்களனைவரையும் ஜயித்து ஒன்றுமில்லாமலிருந்த 32 கோச கிரகங்களையும், தம்மால் ஸம்பாதிக்கப்பட்ட பொருளால் நிறப்பினார். அவர் ஒவ்வொருநாளும் சிவபக்தர்களுக்கு முந்தி ஆதாவுடன் அன்னமளித்து அவர்களுக்குத் திருப்திசெய்துவிட்டுப் பிறகுதான் புசிப்பார். இந்த நியமத்தை எந்தக்காலத்திலும் எவ்விதசிரமம் நேர்ந்தாலும், விடாமல் இவர் சரியாய் அனுஷ்டித்துவருகிறார் என்று உலகிலும் எங்கும் பிரசித்தியாய்விட்டது. இத்துடன் ஸ்ரீ தப்ரஸபாநாதரை (நடராஜ

மூர்த்தியை) எப்பொழுதும் ஸ்மரித்துக்கொண்டே இருப்பார். இக்காரணத்தைக்கொண்டு சகலஜனங்களும் தப்ரபக்தர் என்கிற ஒரு காரணப்பெயராலும் இவரை வழங்குவது உண்டு. இவ்விதம் ஜனங்களால் மிகவும் புகழ்ச்சியுடன் வழங்கப்படும் இவரது பெயரையும் ஆஹாரத்தில் இவருக்கு இருக்கும் நியமத்தையும் நன்கறிந்த அந்தச்சோழவேந்தன் இவரிடத்தில் விசேஷமான பக்திகொண்டு, இனி நாம் இம்மஹானை மந்திரிஸ்தானத்தில் வைத்து வேலைஏவுவதுதப்பென்றுகருதி, அவரிடம்சென்று கூறுகின்றதாவது:—

स चोळराजेन शिवप्रसादो यतो भवत्यभ्यधिकस्ततस्त्वम् ।
नियोज्यतामर्हसि मन्दिरेऽतः सुखं निषीदेति नियोजितोऽभूत् ॥

"ஹே ஸ்வாமின், தங்களிடத்தில் சிவப்பிரஸாதமானது அதிகமாகக் காணப்படுகின்றது. தங்களுக்கு வேலையிடுவதால் நான் பாபத்திற்காளாகிறேன். ஆகையால் தங்களுடைய கிருகத்திலிருந்துகொண்டு வேண்டியகாரியங்களைச் செய்யவேண்டும், இனி அரண்மனைக்கு வரவேண்டாம. உங்களுக்கு வேண்டிய லௌகரியங்களை அரண்மனையிலிருந்தே எப்பொழுதும்போல் நடத்துகிறோம்" என்பதே.

(தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# ரஸமஞ்சரீ.

ஹிந்து சாஸ்திரமறிந்தவர்கள் என்று எவர்களை நாம் மரியாதையோடு போற்றுகின்றோமோ அவர்கள் ஹிந்து சாஸ்திர சம்பந்தமான விஷயங்களில் தமது அபிப்பிராயத்தை உறுதியாகக் கூற யோசிக்கின்றனர். சாஸ்திரமறியாதவர்களுக்கு இந்த விஷயத்தில் தற்காலம் விசேஷ கௌரவமேற்படுகின்றது. எனெனின் அவர்கள் தமது மனம்போனவாறு சாஸ்திரங்களைத்திருத்தி பொருள் கூறவும் சக்திபெற்றவர்களாக விளங்குகின்றனர். இந்த

சாமர்த்தியம் சட்டமூலமாகவும்,பரிணமித்துச்சிலருக்குத்தற்கால நன்மையையும், பலர்க்கு முக்காலத் தீமையையும் அளித்து வருகின்றது. உதாரணமாக ருதுமதீவிவாஹம் விதவாவிவாஹம் போன்றவை சாஸ்திரங்களின் கருத்தைப் பின்பற்றியோ முன் பற்றியோ இப்பொழுது "சட்டபூர்வமான" யாத்யம் பெற்று விட்டன என்பதில் தடையுண்டோ? "ருதுமதீவிவாஹம் சாஸ்திரீயமானதுதான்" என்றுஒருசட்டம்ஸிருஷ்டிக்கப்பட்ட 1915ம் வர்ஷத்திலே ஸ்ரீமான் V. S. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்கள் தமது அபிப்பிராயத்தை ஒரு புத்தகமூலமாகவும் வெளியிட்டார். அதற்கு மறுப்புரையாக இரண்டொருவர் அக்காலத்திலேயே எழுதியுள்ளனராயினும், அக்காலத்தில் ஸநாதனதர்மத்தில் பற்றுள்ள பத்திரிகைகள் தோன்றவில்லை. இத்தருணத்தில் அதுபோன்ற மறுப்புரையும் தர்மவிஷயங்களும் வெளிவருதல் பலவிதத்தில் நன்மை பயக்குமாதலால் அவற்றில் இரண்டொன்றை இங்கு வரைகின்றேன்.

திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த மேலைப்பாவூர் ஸ்ரீமான் P. N. ராமபத்ரய்யரவர்கள் எழுதிய குறிப்பில் அறிய அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. அதில் அவர் தெரிவிக்கின்றார்.

"ஆரியர்களே! ருதுமதீ விவாஹம் நமக்கு வேண்டாம்! வேண்டாம்!! வேண்டாம்!!! நமக்கு வேண்டாம் என்பதனால் இதனை வேண்டுபவர் சிலர் இருப்பதாயும் அவர்களுக்கும், நமக்குமுள்ள வேற்றுமை யாதெனவும் அறியவிரும்புவது படிப்போர்க்கு இயற்கைதான். இதற்குத்தக்க விடையளிக்க வேண்டிய பொருப்பும் எனக்குண்டு"

"சென்னைப்பட்டணம் 1914 ம் வருஷத்திய 12 மசோதாவில் ஷி ஆக்ட் பிறப்பதற்கான ஹேதுக்களும் நோக்கங்களும் என்ற தலைப்பின் கீழ் கூறுவதாவது:—

இந்தியாவில் நம்பூதிரிகள் நீங்கலாக பிராம்மணர்களுக்குள்ளும், பிராமணரல்லாத ஹிந்துக்களில் சில பிரிவினர்க்குள்ளும், ருதுவாவதற்கு முன்னரே பெண்களுக்கு விவாஹம் செய்வது இப்போதைய வழக்கமாயிருக்கிறது.

"இதனால் இந்தச்சீர்திருத்தமானது அநேகமாய் பிராமண ஜனசாரத்திற்கு சுகத்தையோ, அல்லது துஃகத்தையோ உண்டு பண்ணக்கூடியதென்பது வெளி"

ஆகவே, நமக்குப்பூராவும் சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் நம்முடைய மதக்கோட்பாடுகளையும், ஆசாரமுறைகளையும், அரசாங்கத்தினர்க்குத் தெரிவித்து, அவர்கள் நமக்கு முன்னரே அளித்துள்ள தர்மவாக்குப்படி தர்மபரிபாலனஞ் செய்துவருமாறு கோரவும் நமக்கு உரிமையேற்பட்டிருக்கின்றது.

பிராமணர் என்றால் கோத்திரஸூத்திர முறையாக அநுஷ்டானம் செய்து வாழ்நாளைப் பரிசுத்தமாக நடத்துவோரென்றும் அந்த முறைமையைப்பெறாதவர்களின்றும் வேறானவரென்றும் பிரிக்கிறோம்.

கோத்ரமென்பது வம்சத்தையும், ஸூத்ரமென்பது குருவையும் துலக்குவது. பிராம்மணர்கள் நாள்தோறும் செய்ய வேண்டிய கர்மாக்களில் மற்ற எவைகளை உதாசீனமாய்த் தள்ளிவிட்டாலும் அவர்கள் முக்காலங்களிலும் செய்து வருகின்ற சந்த்யாவந்தன ஜப முடிவில், பெரியோர் வந்தனவழிபாட்டில் தான் இன்னகோத்திரம், இன்ன ஸூத்திரம் என்று சொல்லிக்கொண்டே நமஸ்கரிக்கின்றனர். இம்முறை யாவர்க்குந் தெரிந்ததே.

நினைவிற்கு எட்டாதகாலம் முதல் நடாத்தப்பெற்று வருகின்ற ஷடி அநுஷ்டானத்தால் பிராம்மணரொவ்வொருவருடையவும் பூர்வீகஆதாரங்களைத்தேடிப் பாராமலே இன்னபெயருடைய ருஷியின் வம்சத்தையும், இன்னபெயருடைய ருஷியின் அநுஷ்டான முறையையும் உடையவரென்று கேட்டமாத்திரத்தில் சொல்பவர் பிராமணர்களாகவே இருக்கின்றனர்.

எவர் பிறர்க்காகவன்றித் தமக்காகக்கோத்திர ஸூத்திரங்களையறிந்து அவற்றிற்குரிய அநுஷ்டானத்தோடும் விளங்குகின்றனரோ, அவர் பிராமணரென்றும், எவர் தமக்கு கோத்திரஸூத்திர அநுஷ்டானமில்லையென்கின்றனரோ அவர்பிராமணரல்லாதவரென்றும் தெளிவாகின்றது.

கோத்திரத்தால் இன்னருஷியின்ஸந்ததியாரென்றும் ஸூத்திரத்தால் இன்ன ருஷியின்சிஷ்யரென்றும் கஷ்டமின்றி தெரிந்து கொள்ளுவதுதான் பிரயோஜனமா, அன்றி வேறு ஏதேனும் நற்கருத்துண்டா என யோசிக்குமளவில் நம்மால் இன்றும் உச்சரிக்கப்படுகின்ற அவர்கள் புண்யபுருஷர்களென்றும், அந்தப் புண்யங்காரணமாகவே நாம் அவர்களைப்போற்றும் சந்ததியாராக விளங்குகிறோமென்றுங் கருதவேண்டும்.

இந்தப் புண்யபூமியில் பூர்வீக ஆர்யர்கள் தமது இகபரபோகாநுபவ சம்பந்தமாய் எந்த முறையைப் பிரதானமாகக் கைப்பற்றி எண்ணியவாறு காரிய நிறைவேறுதலைப் பெற்று வந்தார்களென்பதற்கு ஒரு அத்தாட்சி வேண்டும்.

ஈசனிடத்து 'ஒரு மனப்படுதல்' என்ற, நிராக்ஷேபமான ஒரு கொள்கையைவிடாமற் கைக்கொண்டு மன அமைதி பெற்று குழவிப்பருவந் தொடங்கிப் பெரு நோன்பைவிடாது அநுஷ்டித்து எண்ணியனவெலாம் கைகூடப்பெற்றதாகத் தெரிகின்றது

ஜானகீஜாநி:.

---

# நமது நிலைமையும் கடமையும்.

பாரதமக்களும் சிறப்பாக பிராமணர்களும் உலகமதிப்பிற்கு எவ்வளவு பாத்ரமாயிருந்தனர். இச்சமயம் எப்படியிருக்கின்றனரென்பது யாவருமறிந்த விஷயம். தாழ்மைக்கு யாதுகாரணமெனில் மனிதப்பிறவியின் முழுமுதற்பயனான ஆத்மஸாம்ராஜ்யத்தையும் அதற்கு ஸாதநமான சமதமாதிகள் கர்மாநுஷ்டானங்கள் ஆசாரம் இவைகளைப் புகட்டும் நூல் முதலியவைகளைக் கைவிட்டதுமே ஸரியான காரணங்களாகும். இம்மை மறுமைப்பயனையளிக்கும் நம் கல்வியை விட்டோம். அன்யர் கல்வியில் ஆசை கொண்டோம் மறுமையை மறந்தோம். இம்மையைச் சாச்வதமாக எண்ணினோம். ஸதாசாரங்களை விட்டோம். துராசாரங்களைப் பின்பற்றினோம் முனிவாழ்க்கையை மறந்தோம். ஆடம்பர வாழ்க்கையில் ஆவல் கொண்டோம். உபகபக விவாஹாதி

களில் மந்த்ர மந்த்ரார்த்தங்களைக் கவனியாது வீணாடம்பரம்
ஊர்வலம் செலவுள்ள சேலை, ஆடல் பாடல் முதலியவைகளில்
மோஹங்கொண்டு செலவை விரித்துக்கொண்டோம். எந்த உத்
தம வைதிகரது நித்யவாழ்க்கையிலும் ஆடம்பரமும் செலவு
முள்ள அன்யவஸ்துக் கலக்காமலில்லை. ஸக்து (மாவு) இருப்பி
டம் தெரியவில்லை. காபி என்ற ரோகமந்திரி எங்கும் பேதமின்றி
அரசுசெலுத்துகிறது. இச்செலவை மீட்கத்தாம் தேவை. அதற
குவழி உத்யோகம். அதற்கு ஆங்கிலக்கல்வி அவசியம். அத
ற்குத் தூராசாரம் இயற்கை. ஆகவே நமது மதக்கல்வியை நமது
பாஷையின் வழியாக கற்காமல் அன்யபாஷை மூலமிதை
உணர்ந்து ஏதேதோ தத்துவம் பேசுவர் பலர். எதைச்செய்தா
லென்னவெனத் துணிச்சலுடன் அக்ரமம் செய்வர் சிலர். எதற்
கெடுத்தாலும் காரணம் கூறென்பர் சிலர். உட்கருத்தை உண
ராது வைதிகாசாரத்தை நிந்திப்பர் சிலர். அர்த்தத்தில் ஆவல்
கொண்டு அன்யநாடு செல்வதையும், காமத்திலீடுபட்டு அஸவர்
ணத்தில் மணப்பதையும், நடை, உடை, உணவுகளில் அன்யரைப்
பின்பற்றுவதும், நமது முன்னேற்றமென்பர் சிலர். ஆதலால்
பிராம்மணோத்தமர்களது ஈர்ஷைக்கும், நிந்தைக்கும், ஆளா
னோம். உபாத்தியாய (புரோஹித) பதவிக்குவேண்டியதை நன்
குணராது அதைக்கேவலம் விருத்திக்காக நடத்தும் வைதிகர்கள்
நமது லௌகிக ஸஹோதரர் அலக்ஷ்யத்திற்கும் அப்ராமணரது
(ஆசாரம் கொந்துகிறார் என்ற) நிந்தைக்கும் ஆளாயினர். இவ்
விரண்டிற்குமிடையிலுள்ள சிலபிராமணரும் பொதுவாகஸந்தம்ச
நியாயமாக நிந்திக்கப்படுகின்றனர். உண்மையான தர்மநூல்க
ளில் கூறப்படும் பூர்ண பிராமாண்யம் எங்கே இருக்கின்றது.
அதவா அதமபக்ஷமாகக் கலியில் விதிக்கப்பட்ட அநுஷ்டானங்
களாலாவது அதை நிலைக்கவைக்க முடியவில்லை. சமதமாதிகளை
விட்டுக் 'காமக்ரோதாதிகளிலீடுபட்டு உயிரற்ற உடலைப்போல்
உட்கருத்தைவிட்டுக் கேவல கர்மாவைச்செய்து வருகிறோம்.
அத்யாத்ம திருஷ்டி அடியுடன் அவிந்துவிட்டது. பொருளாதார
நிலைமையில் தலைகால் தெரியாது பேரலையில் மூழ்கிக்கிடக்கிறோம்.
ராஜீய நிலையிலோ சண்டாளர்களாகக் கருதப்படுகிறோம். உத்

யோக மோகத்திலீடுபட்டு உள்ள தனத்தையிழந்து நிற்கிறோம். இச்சமூஹத்தை யார் சீர்த்திருத்துவது ? எப்படித்திருத்துவ தென்பதே கேள்வி ? கார்யத்தில் நடவாத அனுஷ்டானத்தில் கொண்டுவாமுடியாதபலயோஜனைகளைச்சொல்வதில் பயனென்ன? நமது ஊழலை நிவர்த்தித்தல் அத்யாவசியமானது. இதுவிஷயமாக யான் செய்த முயற்சிகள் பூர்ணபலனை யளிக்கவில்லை. ஆகவே பொதுவான புதியஸாத்யமான யோசனையேவேண்டும். அர்ஜுன னுக்கு அக்ஞானம் தோன்றியதுபோல் போலிக்கருணையும் அதர் மத்தில் தர்மபுத்தியும் பலருக்குத் தோன்றியதை நீக்கவேண்டும். ஸ்ரீஜகத்குரு கும்பகோணம் ஸ்ரீபகவத்பாதாளது பாததூளியால் பவித்ரமாகும். கிராமங்களில் பாமரநாஸ்திகனும் ஆஸ்திகனுகிறான். ஸ்ரீ ஸ்வாமிகள் ஊரை விட்டவுடன் பாசிபோல் இருள் அவனைச் சூழ்ந்துவிடுகிறது. ஸ்ரீ குருபாதாள் ஆக்ஞைப்படி ஒவ்வொரு ஊரி லும் ஸநாதனஸபையைத் தோன்றுவித்தல் வேண்டும். இதில் ஆஸ்திகர் அனைவரும் ஜாதிமதபேதமின்றிச் சேரவேண்டும். கார்ய நிர்வாஹகர் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலம் வீண் செலவை நித்யத்திலும் விவாஹாதிகளிலும் குறைத்தல், அவர வருக்கேற்றபடி வேதவேதாந்தங்களும் மதக்கல்வியும் புகட்டல், ஆலயரக்ஷணம், ஆசார்ய ஸம்பாவனை, ஏழைகளுக்குதவுதல், பஞ்சமரை சுத்தப்படுத்தி அன்னியரின் துர்மார்க்கத்திற்கிடங் கொடாமை, வைதிகமதப் பத்திரிகைகளை வாசித்தல் போன்ற காரியங்களைச் செய்தல்வேண்டும். இச்சிலவிற்குக் கிராமப்பொ துப் பணத்தை உபயோகிக்கலாம். அல்லது பிடி அரிசிக்கலயம் வைத்து வசூலிக்கலாம். ஸ்ரீ மடத்தின் காரியஸ்தர் அடிக்கடி ஷ சபைகளை மேற்பார்வையிடல், பிள்ளைகளைப் பரீக்ஷித்து ஸம்மானமளித்தல் முதலியனவும் செய்தல்வேண்டும்.

ஆர்யதர்மத்தை நித்தியபத்திரிகையாக்கிக்குறைந்த சந்தாவில் எங்கும் பிரசாரம்செய்து பாமார்த்த தத்துவத்துடன் ஷ சபை களின் நிகழ்ச்சிகளை துராக்ஷேபத்திற்குத் தக்க விடைகளையும் பிரசுரிக்கவேண்டும். பணமிருந்தால் இன்கம்டாக்ஸ்போல் தனிகர்களிடம் ஸ்ரீ குருஸ்வாமிகள் ஒரு மதவரி வசூலிக்கலாம். ஆங்கிலத்திலும் ஒரு பத்திரிகையைத் துவக்கிப் பலருள்ளத்தில்

பதிந்து கிடக்கும் நமது ஆசாரவிஷயமான இருளை நீக்கலாம் ஆங்கிலமும் கீர்வாணமுமறிந்து வர்ணாச்ரமத்தில்பற்றுக்கொண்ட பெரியார்களைக்கொண்டு ஏனைய ஆங்கிலப் பத்திரிகைகளிலாவது ஆசாரத்தின் பெருமையை யுக்தியுக்தமாக வெளியிடலாம். படித்த பல பண்டிதர்கள் அதிக ஆசையை விட்டு அல்பஊழியம் பெற்று மதப்பிரசாரம் செய்ய முன்வரவேண்டும். ஆடம்பர வாழ்க்கையை வெறுத்துக்கூடுமானமட்டும் சமதமாதிகளைக் கைக் கொண்டு ஸங்கிரஹமாக நித்யகர்மாவை விடாது ஆசரிக்கும் ஒரு கோஷ்டி ஊரூராய் அநுபவ பூர்விகமாக உபன்யஸிக்கவேண் டும். இதில் சிலவற்றை என் அநுஷ்டானத்தில் வைத்துக்கொண் டிருக்கிறேன். ஸ்வல்ப பலமே காணப்பட்டது. ஒரு ஸங்கம் இத்துரையிலிறங்கில் ஜாதித்வேஷம் அகலும். நாடும் ஜாதியும் நாமும் தர்மமும் செழிக்குமென்பதற்கு ஆக்ஷேபமில்லை. ஆங் காங்கு மூலையில் இதேபோல் சிலர் செய்துவருவது என்னைப் போல் மற்ற ஆஸ்திகர்களது மனத்திற்கும் ஆனந்தத்தை யளிக் குமன்றோ? குறைந்தது இதை ஆமோதிப்பவராவது இருப்பா ரென நம்புகிறேன்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.

---

## குருபக்தியின் அவசியம்.

குரு யார்?

गुशब्दस्त्वन्धकारः स्याद्रुशब्दस्तन्निरोधकः ।
अन्धकारनिरोधित्वाद्गुरुरित्यभिधीयते ॥
असंशयः संशयच्छिद्गुरुरुक्तो मनीषिभिः ॥

கு=அக்ஞான இருள். ரு=போக்கிறது. நம்மிடம் குடி கொண்டிருக்கும் அக்ஞானமெனும் இருளைப்போக்குகிறவர் எவ ரோ அவரே குரு எனப்படுவர். மேலும், அவர் விஷயங்களைஐயம் தரிபறக்கற்பிப்பவர் எனவும் புத்திமான்களினால் கூறப்படுகிறார்.

இவரை நாம் சாதாரணமான மானிடரே எனக்கருதலாகாது. ஏனென்றால்

आचार्यः सहरिः साक्षाच्चररूपी न संशयः ।
मग्नानुद्धरते लोकान्कारुण्याच्छास्त्रपाणिना ॥
अगम्यत्वाद्धरिस्तस्मिन्नाविष्टो मुक्तिदो भवेत् ॥

ஆசார்யர் என்பார் ஸாக்ஷாத்தாக நடமாடும் தெய்வமே. சாஸ்திரங்களைப் புகட்டி ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்கிக்கிடப்பவர்களை யாதொரு கைம்மாறையும் அபேக்ஷியாமல் கேவலம் கருணையினாலேயே உத்தாரம் செய்பவர். இவ்விஷயத்தில் ஐயமில்லை. மேலும் ஸாக்ஷாத்தாக ஈசுவரனே அவரிடம் பிரவேசித்து முக்தியை அதாவது ஞானத்தைக் கொடுக்கிறார்.

( मुच्यते अनेन इति मुक्तिः ज्ञानम् )

இதற்கனுகுணமாக ஸ்ரீபகவானும் குசேலரிடம் சொல்லியிருப்பதாவது "எவன் இந்த சரீரத்தை உண்டுபண்ணுகிறானோ அந்த பிதா முதலாவது குரு. உபநயனம் செய்வித்துக் கர்மாக்களைச் செய்யும் அதிகாரத்தையுண்டுபண்ணுகிறவர் இரண்டாவது குரு. எல்லோருக்கும் ஞானத்தைக் கொடுப்பவர் மூன்றாவது குரு. நானே அந்த குருஸ்வரூபியாக இருக்கிறேன் என்பது கருத்து."

ஸ்ரீமத் பாகவதம் தசமஸ்கந்தம்.

உபதேசிக்கும் வகை:—

சிஷ்யர்களினிடையே சிலர் ராமகிருஷ்ணாதி அவதாரரூபங்களைத் திவ்ய திருஷ்டியினால் தரிசித்து மோக்ஷமடையத்தகுந்தவர்கள். வேறு சிலர், தமது ஹிருதயகமலத்தில் வீற்றிருக்கும் பிம்பமூர்த்தியான பகவானை அபரோக்ஷீகரித்து மோக்ஷம் அடைபவர். இவ்வாறாக அவரவர்களின் யோக்யதையை அறிந்து உபதேசிப்பவர் நியதகுரு எனப்படுவர். இவர் சீடர்களைப் பார்த்து 'நீங்கள் இவ்விதமாக உபாஸனை செய்யவேண்டும்' என்ற ஒரு விதியையும் எற்படுத்திக் கொடுப்பார். பகவத் தத்வத்தை மாத்திரம் உபதேசிப்பவர் அநியதகுரு எனப்படுவர். 'அநியத' என்ற பதத்திற்கு 'மோக்ஷஸாதனமல்லாத வித்யையை உபதேசம்

செய்கிற' என்பது அர்த்தம். ஆனால் இங்கு மோக்ஷஸாதனமல்லாத வித்யையை ஏன் பயிலவேண்டும்? என்றோர் சங்கை நிகழலாம். இதர வித்யைகளும் மோக்ஷஸாதனமான கல்விக்கு ஓர் அங்கமாயிருப்பதால் அவைகளையும் அப்யஸிக்கவேண்டியது அவசியம்.

**अन्येपि स्वात्मनो मुख्याः क्रमाद्गुरव ईरिताः ।**

என்று கூறப்பட்டபடி, பொதுவாகத் தன்னைவிடப் பெரியோர்களனைவரும் குருதான். ஆனால் அவரவர்களின் யோக்யதைக்குத் தக்கவாறு பக்தியைச் செய்யவேண்டும்.

ரிஷிகள் ஞானிகளாகையால் அவர்கள் மனுஷ்யோத்தமர்களுக்கு நியதகுருக்கள். மனிதர்களைக் காட்டிலும் சக்ரவர்த்திகள் மேலானவர்களாகையால் அவர்கள் ஏன் குருவாகக்கூடாது? க்ஷத்திரியர்களான சக்ரவர்த்திகளுக்கு வேதாதிகாரம் முதலியன சுருதிகளில் விதிக்கப்பட்டிருந்தாலும், பிறருக்குப் பாடம் சொல்லுதல் (ப்ரவசனம்) பிராம்மணர்களுக்கே தான் விதிக்கப்பட்டுள்ளது. ஆகையால் மனிதர்களுக்கு சக்ரவர்த்திகள் நியதகுருக்களாகமாட்டார்கள். 'சாந்தோக்ய உபநிஷத்தில் பௌத்ராயண ராஜன் பஞ்சாக்நி வித்யையையும் அச்வபதி அரசன் வைசுவாநர வித்யையையும் உத்தாலகரென்ற பிராமணருக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள். எனக்கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் சக்ரவர்த்திகள் நியதகுருக்களாயிற்றே! என ஒரு சங்கையும் உண்டாகலாம். உத்தாலகர் முதலியவர்கள் முதலிலேயே ஜாதாபரோக்ஷர்கள். (பிறப்பிலேயே அபரோக்ஷஞானமடைந்தவர்கள்.) மோக்ஷஸாதகத்தில் அதிசயம் ஏற்படுவதற்காக ஏகதேசஉபதேசம் செய்துகொண்டார்களேயொழிய வேறல்ல. ஆகையால் சக்ரவர்த்திகள் நியதகுருக்களாகார் என்று நாம் மீண்டும் வற்புறுத்தவேண்டியதில்லை.

ரிஷிகளில் உத்தமர் அதமர்களுக்குக் குருவாக இருக்கின்றார்கள். ஸத்யகாமரென்ற ருஷிக்கு கௌதமர் குருவாகவும், உபகோஸலரென்ற ருஷிக்கு ஸத்யகாமர் குருவாகவும் இருந்தனர் என்ற விஷயம் சாந்தோக்ய உபநிஷத்திலிருந்து எளிதில் அறியப்படுகிறது. இவ்வித ருஷிகளுக்குத் தேவதைகள் நியதகுருக்கள்

ஆவர். தேவதைகளினிடையேகூட குரு சிஷ்யபாவமுண்டு. உதாரணமாக ஸூர்ய சந்திர பத யோக்யர்களான ஸுரூபன் முதலிய தேவதைகளுக்குக் கருடபதயோக்யர்களான ஸுமனு முதலிய தேவதைகள் குருக்கள்.

குருவின் பரிமாணம் முதலியன:—

षण्णवत्यङ्गुलो यस्तु न्यग्रोधपरिमण्डलः ।
सप्तपादश्चतुर्हस्तः द्वात्रिंशल्लक्षणैर्युतः ॥

குருசிரேஷ்டர், தொண்ணூற்றாறு அங்குலம் ( எட்டு அடி ) உயரமுள்ளவரா யிருக்கவேண்டும். இவ்வுயரமானது அவருடைய கைகளினால் ஒரு பாகத்துக்குச் சரியாய் இருக்கவேண்டும். அவருடைய காலடியால் ஏழு அடி உயரமாயும் அவருடைய கைகளினாலேயே நான்கு கை அளவுள்ளவராயும் இருக்கவேண்டும். இவைதவிர † முப்பத்திரண்டு லக்ஷணங்களுள்ளவராயும் இருக்கவேண்டும்.

குருவின் அநுக்ரஹம் ஏன் அவசியம் ?

இவ்விஷயத்தை நிரூபணம் செய்வதற்கு முன் இவ்விஷயமாக ஏற்படும் சில சங்கைகளையும் பரிஹரிப்போம். சங்கை:—

குரு எதற்காக? நமக்கு ஒருவிஷயம் தெரியாவிடில் புஸ்தகங்களை வாசித்தே தெரிந்துகொள்ளலாம். அவைகளோ ஏராளமாய்க் கிடைக்கின்றன. அங்கும் ஸந்தேஹம் பிறந்தால் வியாக்யானங்களைப் பார்த்தால் சுலபமாய்த் தெரியவரும்.

ஸமாதானம்— அவ்வாறு புஸ்தகங்களைத் தானே பார்த்துக்கொள்ளும் அறிவு முதலில் தானாகவே உண்டாகாது. பாலசிக்ஷை முதலியவற்றை யாராவது ஒருவரிடமிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால் குரு அவசியம்தான். ஆயினும் தானே ஸமஸ்த சாஸ்திரார்த்தங்களையும் அறிந்துகொள்ளும் சக்தியுடையவனாயிருந்தாலும் குரு முகமாக அவைகளைச் சிரவணம் செய்யாவிடில் அவையாவும் பிரயோஜனமற்றவையே என்பதும் பின்னர்த் தெரியவரும்.

---

† ஆர்யதர்மம் 10-வது ஆண்டு 30-ம் ஸஞ்சிகை 479-ம் பக்கத்தில் இந்த லக்ஷணங்களைக் காண்க.

சங்கை— "பகவானை அறியவேண்டுமாயின், சிரவணம் மனனம், நிதித்யாஸனம் இவைகளைச் செய்யவேண்டும்" என்று தான் சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. குருப்ரஸாதம் அவசிய மென்று சுருதி கூறவில்லையே ?

ஸமாதானம்— அச்சுருதியில் சொல்லப்படாதிருப்பினும் மற்ற அனேக பாகங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஷை சுருதி யிலேயே குருப்ரஸாதம் அவசியமென்று கூறப்பட்டதுபோலவே கருதலாம். எப்படியெனின் சுருதியானது "ஸோமபானம் செய் யுங்கள்" என்று கூறுகிறது. அங்கு 'ஸோமதேவதையைக் கை யினால் பிழியவேண்டும்' என்று சொல்லாதிருப்பினும் அதன் ரஸத்தைப் பானம் செய்ய எப்படி நாம் பிழியவேண்டுவது அவ சியமோ அப்படியே இங்கும் குருப்ரஸாதபூர்வகமான சிரவணம் முதலியனவே முக்கியமானவைஎன்று கொள்ளல்வேண்டும். குரு ப்ரஸாதம் அவசியமென்று கூறும் சில சுருதி ஸ்மிருதிகளையும் இங்குக் கூறுவாம்.

"ஆசார்யனையுடைய புருஷனே எல்லா விஷயங்களையும் நன் ருக அறிவான்" சாந்தோக்ய உபநிஷத் "ஆசார்யனிடமிருந்து அறியப்பட்ட கல்விதான் மேன்மையை அடைகிறது" சாந்தோ க்யம். "பகவானை அறிவதின்பொருட்டு பக்திமானும் வேதாத் யயனம் செய்தவருமான குருவையே கைகளில் ஸமித்துக்களை எடுத்துக்கொண்டு ( அல்லது அஞ்ஜலிபந்தஞ் செய்துகொண்டு ) அடையவேண்டும்" முண்டகோபநிஷத். (ஆதர்வணோபநிஷத்)

यस्य देवे परा भक्तिः यथा देवे तथा गुरौ ।
तस्यैते कथिताह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥

சுவேதாசுவதரோபநிஷத்.

"பகவானிடம் எப்படி உத்தமமான பக்தியைச்செய்கிறானோ அப்படியே குருவினிடமும் அவருடைய யோக்யதைக்குத் தக்க வாறு பக்தியைச் செய்யவேண்டும். அப்படிப் பக்தியைச் செய் கிறவனுக்கே மேலே சொல்லப்பட்ட விஷயங்களும் மற்றவையும் தெளிவாக விளங்கும். அவன் தான் "மகாத்மா" இவ்விதம் அநேக சுருதிகளில் குருபக்தி அவசியம் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் ஸ்ரீ வியாஸபகவானும் प्रदानवदेव हि तदुक्तम् (3—3—44) என்னும் ஸூத்திரத்தில் குருப்ரஸாதம் அவசியம் என்றும் நிர்ணயம் செய்தருளியுள்ளார்.

சங்கை:— குருப்ரஸாதம் அவசியம்தான். ஆயினும் சிஷ்யன் செய்யும் மனனம் முதலிய ப்ரயத்னம் தான் மேலானது. அது இல்லையேல் குரு கற்பித்த வித்யை பிரயோஜனமற்றதாகுமல்லவா! அல்லது சிஷ்யனின் பிரயத்னமும் குருப்ரஸாதமும் ஸமமேதான். குருவின் அநுக்ரஹம் எப்படி மேலானது?

ஸமாதானம்:—குருவின் அநுக்ரஹம்தான் மேலானது. சிஷ்யன் மனனம் செய்யாவிடினும் அவனுடைய பணிவிடையால் சந்தோஷமடைந்த அவர் உனக்கு வித்யை உண்டாகக்கடவது, என்று ஆசீர்வாதம்செய்த மாத்திரத்தினாலேயே சிஷ்யன் நல்ல ஞானியாகிறான், என்பது பின்வரும் சில சரித்திரங்களால் தெரிய வரும்.

முற்காலத்தில் அயோதர் என்ற ஓர் ரிஷி இருந்தார். அவருக்கு ஆருணி, உபமன்யு, பைதன் என்ற மூன்று சீடர்களுண்டு. ஒருநாள் ஆருணியைத்தம் கழனியின் மடையைக் கட்டும்படிக் கட்டளையிட்டார். ஜலம் அதிகமாயிருந்ததால் அதைக்கட்டமுடியாமல் அவன் அம்மடையில் படுத்துக்கொண்டுவிட்டான். வெகுநேரமாகியும் சிஷ்யன் வராததுகண்டு, குரு வயலுக்குப்போய்ப் பார்க்கையில் கழனிமடையிலிருந்து எழுந்துவந்து குருவை நமஸ்கரித்தான். அவனிடம் ப்ரீதியடைந்து குரு சொன்னதாவது "நீ கழனிமடையைப் பிளந்துகொண்டு எழுந்ததால் உத்தாலகன் (பிளந்துகொண்டுவருபவன்) எனப்பெயர்பெறுவாய். என்சொல்லை நிறைவேற்றியதால் எல்லா சாஸ்திரங்களும் உனக்குப்பிரகாசிக்கும். இவ்விதமாக அவன் பெரிய வித்வானானான்.

(தொடரும்)

எம். ராமராவ்,
மாத்வ ஸபைக் கார்யதர்சி.